2020 மார்ச் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அவர்கள் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டார். தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.*

*__திரு. துரைமுருகன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், இவ்வளவு அனுமதித்து, மீண்டும் அடுத்த நாள் எடுத்துக்கொள்கிறேன் என்று சபையில் ஓர் உறுதிமொழி அளித்த காரணத்தால், மாண்புமிகு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அவருக்கு மரியாதை கொடுத்து, இன்றைக்கு உட்காரலாம். நாளைக்கு எடுத்துக்கொள்ளவில்லையென்றால் நாம் அத்தனைபேரும் சேர்ந்து போராடலாம்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இருக்கைகளில் அமர்ந்தனர்.)

6. வனம், சுற்றுச்சூழல், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, உயர் கல்வி ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரியில் கட்டப்பட்டு வரும் வனத் துறை தலைமை அலுவலகக் கட்டடங்களுக்கான உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 22.75 கோடி ரூபாயும், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் விலங்குகள் உலாவிட உலகம் அமைப்பதற்காக 11.5 கோடி ரூபாயும், திண்டுக்கல், சிறுமலையில் சிறு வன உயிரினப் பூங்கா அமைப்பதற்கு 10 கோடி ரூபாயும், சேலம், குரும்பப்பட்டியில் நடுத்தர வன உயிரினப் பூங்காவை மேம்படுத்த 8 கோடி ரூபாயும், வன நிலங்களில் ஏற்படும் தீத் தடுப்புப் பணிகளுக்கான கட்டமைப்பு மற்றும் அது தொடர்பான பணிகளுக்கு 23.26 கோடி ரூபாயும், மனித–யானை*

[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] [2020 மார்ச் 13

மோதல்களைத் தடுக்கும்பொருட்டு தருமபுரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் எஃகுக் கம்பிகள் அமைப்பதற்கு 21 கோடி ரூபாயும், திருச்சிராப்பள்ளி வனக் கோட்டம், எம்.ஆர். பாளையம் காப்புக்காட்டில் வன உயிரினப் பூங்கா அமைப்பதற்கு 10 கோடி ரூபாயும் ஒதுக்கி, என பெரிய அளவிலே மனது வைத்து வனத் துறைக்கு முத்தான அறிவிப்புகளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்ததற்கு வனத் துறையின் சார்பிலே எங்கள் அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம், நன்றி, வணக்கம்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். இந்திய நாட்டின் வரலாற்றில் எங்குமே இல்லாத அளவிற்கு பள்ளிக் கல்வித் துறைக்கு 34,181.73 கோடி ரூபாய் வழங்கிய வரலாறு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே மட்டும்தான் நடைபெற்றிருக்கிறது. விளையாட்டுத் துறைக்காக 218.66 கோடி ரூபாயை வழங்கி இந்தியாவிலே தமிழ்நாட்டிலேதான் வரலாறு படைக்கப்பட்டிருக்கிறது என்ற முறையில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றும் விதி 110–ன்கீழ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு, வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடை வள்ளல் புரட்சித் தலைவர் வழியில் வாரி வழங்கும் குணம், புரட்சித் தலைவி நெறியில் புது மலர்ச்சி தரும் மணம், எல்லோர் விழிகளும் வியக்கும்வண்ணம் உயர் கல்விக்கு ஒப்பற்ற உயர்வு தரும்வகையில் இன்று இந்த அவையில்

2020 மார்ச் 13] [திரு. கே.பி. அன்பழகன்]

விதி 110–ன்கீழ் பல்வேறு திட்டங்களுக்காக ரூ.426 கோடி உயரியத் தொகையை வழங்கியதோடு மட்டுமல்லாமல், நேற்றையதினம் ரூ.220 கோடி அளவுக்கு புதிய அறிவிப்புகள் தருவதற்கு அனுமதி தந்து, ஒளிமயமான திட்டங்களைத் தந்து, புது ஒளி ஏற்றி வைத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் உயர் கல்வித் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி மலர்களை சமர்பித்து மகிழ்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம், நித்தம் புதிய அறிவிப்புகள், நித்தம் நித்தம் புதிய சாதனைகள் செய்து இந்தியாவிலே இருக்கின்ற 18 பெரிய மாநிலங்களில் தமிழ்நாடுதான் முதன்மை மாநிலம் என்கின்ற உயரிய இலக்கை அடைய உழைத்தவரும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒருசொட்டு மழைநீர்கூட வீணாகாமல் குடிமராமத்துத்திட்டத்தைக் கொண்டு வந்து பல சாதனைகளைச் செய்துவரும் குடிமராமத்து நாயகரும், காவேரி பகுதியைக் காப்பாற்றிய காவேரி காப்பாளரும், பிளாஸ்டிக் ஒழிப்பிற்கு இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக சட்டம் கொண்டு வந்து, இன்றைக்கு தமிழகத்தைச் சிறந்த முறையிலே வழி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு ஈரோடு மாவட்டத்திலே கோபிசெட்டிப்பாளையத்திலே 2 ஏரிகள், அதாவது செங்குட்டை ஏரியையும், வண்ணான்குட்டை ஏரியையும் சீரமைத்து, நடைபாதை, மின் விளக்குகளையெல்லாம் அமைத்து அனைத்து பெரியவர்களும் நடைபாதையிலே நடைபயிற்சி செய்கின்ற ஒரு நல்ல திட்டத்தையும், திருவண்ணாமலை மாவட்டம், சூரியகுளத்தில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க தனியாக ஒரு கழிவுநீர்க் கால்வாய் ஏற்படுத்தவும் அறிவித்துள்ளார்கள். சுற்றுச்சூழல் துறையின்மூலம் சென்ற ஆண்டுதான் நாமக்கல்லிலே புதிதாக ஓர் அலுவலகம் தொடங்கப்பட்டது. அதற்கு இந்த ஆண்டு கட்டடம் கட்டுவதற்காகவும், நாமக்கல், நாகர்கோவில் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பாக புதிய கட்டடம் கட்டுவதற்கும் 9 கோடி ரூபாய் அளவிற்கு அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*